Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

TUESDAY, FEBRUARY 11 2025

செவ்வாய்க்கிழமை 11, பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 156 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## நாடளாவிய ரீதியில்

# ஒன்றரை மணிநேரம் மின்வெட்டு அமுல்

நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமை(10) மற்றும் செவ்வாய்கிழமை (11) நாளொன்றில் தலா ஒன்றரை மணிநேரம் சுழற்சி முறையில் மின் விநியோகத் தடையை அமுல்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது.

இலங்கை மின்சார சபையினால் திங்கட்கிழமை(10) நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான யோசனை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. மின்சார சபை விடுத்த கோரிக்கையை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது. அதன்படி, நாடளாவிய ரீதியில் 4 குழுக்களின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள பகுதிகளில் மாலை 3.30 மணி முதல் இரவு 9.30 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் ஒன்றரை மணித்தியாலங்கள் மின் தடை நடைமுறைப்படுத்தப்படும்.

அதாவது, A,B,C,D ஆகிய வலயங்களில் பிற்பகல் 3.30 முதல் 4 மணிக்குள் மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு 5 மணி முதல் 5.30 வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும்.

E,F,G,H,U,V ஆகிய வலயங்களில் பிற்பகல் 5 மணி முதல் 5.30க்குள் மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு மாலை 6.30 முதல் 7 மணி வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

I,J,K,L,P,Q ஆகிய வலயங்களில் மாலை 6.30 முதல் 7 மணி வரை மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு இரவு 8 மணி முதல் 8.30 வரையான காலப்பகுதிக்குள் மீள் இணைக்கப்படும்.

R,S,T,W ஆகிய வலயங்களில் இரவு 8 மணி முதல் 8.30 வரை மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு இரவு 9.30 முதல் 10 மணி வரையான காலப்பகுதிக்குள் மீள் இணைக்கப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் ஞாயிற்றுக்கிழமை(09) ஏற்பட்ட திடீர் மின்தடையையடுத்து, நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்று மின் உற்பத்தி இயந்திரங்களும் செயலிழந்துள்ளன.

குறித்த இயந்திரங்களை மீண்டும் தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பதற்கு சுமார் 4 நாட்களாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரங்களின் செயலிழப்பினால் தேசிய மின் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சமநிலையற்ற தன்மையை முகாமை செய்து, மின்சக்தியை பங்கீடு செய்யும் நோக்கில் மின்வெட்டை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கோழி இறைச்சி, முட்டையின்

# விலைகள் வீழ்ச்சியால் சிரமத்தில் உற்பத்தியாளர்கள்



கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளதால் உற்பத்தியாளர்கள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக அகில இலங்கை கோழிப்பண்ணை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை (09) அன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட இலங்கை கோழிப்பண்ணை வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் மாதலி ஜெயசேகர இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு

# பயணமானார் ஜனாதிபதி அனுர




ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயிட் அல் நஹியனின் அழைப்பையேற்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு திங்கட்கிழமை (10) ஐக்கிய அரபு இராச்சியத்திற்குப் புறப்படுச் சென்றுள்ளார்.

இந்த சுற்றுப்பயணத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க டுபாயில் நடைபெறும் 2025 உலகத் தலைவர்கள் உச்சி மாநாட்டிலும் உரை நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ச்சி P2

## அரச நிதியை கையூட்டலாக பெற்ற

# முன்னாள் எம்.பிக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை



இழப்பீடு என்ற பெயரில் அரச நிதியை கையூட்டலாக பெற்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகத் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலை, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளிநொச்சி தொடருந்து நிலையத்துக்கான களவிஜயத்தில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக்

தொடர்ச்சி P2

# ஹிருணிகாவின் பிடியாணையை திரும்பப் பெறுமாறு உத்தரவு



வழக்கில் ஆஜராகத் தவறியதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவிற்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை திரும்பப் பெறுமாறு திங்கட்கிழமை(10) கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு கருவாத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் போக்குவரத்துக்கு

தொடர்ச்சி P2

## காங்கேசன்துறை–நாகபட்டினம் இடையே

# மீண்டும் பயணிகள் கப்பல் சேவை

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் இடையிலான பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவையானது எதிர்வரும் புதன்கிழமை (12) மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிவகங்கை கப்பல் சேவை நிறுவனத்தின் தலைவர் சுந்தரராஜ் பொன்னுசாமி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2




# வெள்ளியன்று விசேட சபையமர்வு



விசேட பாராளுமன்ற அமர்வை எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்துவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானித்துள்ளது.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்மானத்தை சபாநாயகர் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கும் நோக்கிலேயே விசேடமாகப் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# லசந்த விசாரணை சுருக்கத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்கவும்



ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை தொடர்பில் விசாரணைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு விசாரணை சுருக்கமொன்றை நீதி அமைச்சர் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# 2 பஸ்கள் மோதி விபத்து: நால்வர் உயிரிழப்பு

தம்புள்ளை-குருநாகல் பிரதான வீதியில் உள்ள தொரயாய பகுதியில்தொரடியாவ பொலிஸ் பிரிவில் திங்கட்கிழமை (10) காலை இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உட்பட நால்வர் பலியாகியுள்ளனர்.

கதுருவெலவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பயணிகள் பேருந்து பயணிகளை ஏற்றிச் செல்ல நின்றிருந்தபோது, அதே திசையில் சென்ற மற்றொரு தனியார் பேருந்து நிறுத்தப்பட்டிருந்த பேருந்தின் பின்புறத்தில் மோதியது.

தொடர்ச்சி P2

# பொலிஸ் உயர் பதவிகளில் இடமாற்றம்

குற்றப் புலனாய்வு பிரிவு (CID) மற்றும் நிதி குற்றப் புலனாய்வு பிரிவு (FCID) ஆகியவற்றுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அசங்க கரவிட்டவின் இடமாற்றத்திற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் நிதி குற்றப்புலனாய்வு பிரிவுக்கு பொறுப்பதிகாரியாக பிரதி பொலிஸ்மா அதிபர் எம்.டி.பி.தயாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதிக் குற்றச் செயல்கள் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்காக அடுத்த வாரம் நிதி குற்றப் புலனாய்வு பிரிவு ஸ்தாபிக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, மேல் மாகாண

தொடர்ச்சி P2

# நான்கு பதில் அமைச்சர்கள் நியமனம்



2025ஆம் ஆண்டுக்கான உலக அரசுகள் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திற்கு விஜயம் செய்துள்ளதையடுத்து, நான்கு அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கீழ் உள்ள மூன்று அமைச்சுகளான டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் விஜயத்தில் இணைந்துள்ள அமைச்சர் விஜித ஹேரத்தின் கீழ் உள்ள வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு ஆகியவற்றுக்கும்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வெள்ளியன்று விசேட சபையமர்வு

பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் (வைத்தியர்) ரிஸ்வி சாலியின் தலைமையில் திங்கட்கிழமை (10) கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 16இன் ஏற்பாடுகளுக்கு அமைய கௌரவ பிரதமரினால் கௌரவ சபாநாயகரிடம் விடுக்கப்படும் கோரிக்கைக்கு அமையப் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அழைப்பு விடுக்கப்படுகின்றது. அத்துடன், பெப்ரவரி 14ஆம் திகதி இந்தச் சட்டமூலத்தை ஆராய்வதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சுசார் ஆலோசனைக் குழுவைக் கூட்டுவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தேர்தல்களை விரைவில் நடத்துமாறு உயர்நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் பின்னணியில், இதற்கு மதிப்பளிக்கும் வகையில் தேர்தலை மேலும் காலதாமதப்படுத்தாது நடத்துவதன் அவசியத்தை கௌரவ சபை முதல்வர், அமைச்சர் பிமல் ரத்னாயக்க இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2.00 மணி முதல் பி.ப. 7.00 மணிவரை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

குறித்த சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் திருத்தங்களை முன்வைப்பதாயின் அவற்றை பெப்ரவரி 17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் வழங்குவதற்கும் இங்கு இணங்கப்பட்டுள்ளது.

அதேநேரம், நிதி அமைச்சர் என்ற ரீதியில் கௌரவ ஜனாதிபதி அவர்களினால் 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவு-செலவுத் திட்ட உரை) முன்னர் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய பெப்ரவரி 17ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு முன்வைக்கப்படும் என்றும் பதில் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

# லசந்த விசாரணை சுருக்கத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்கவும்

அதேவேளை, சட்டத்துறை மீது அழுத்தங்களை பிரயோகிப்பதையும் அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பொலன்னறுவையில் ஞாயிற்றுக்கிழமை (09) கிராமத்துக்கு கிராமம் வேலைத்திட்டத்தை ஆரம்பித்த போது, ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, தமக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கிய மக்களுக்கு இந்த அரசாங்கம் அநீதியிழைத்துள்ளது.

தாம் கூறிய அனைத்தும் பொய் என்பதை அரசாங்கமே ஒத்துக் கொண்டதைப் போன்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. பழைமை முறையிலேயே இந்த அரசாங்கத்தின் ஆட்சியும் தொடர்கின்றது.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை தொடர்பில் நீதி அமைச்சர் பாராளுமன்றத்துக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த வழக்கு தொடர்பில் எத்தனை சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், விசாரணைகள் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறித்த சுருக்கமொன்றை விசாரணைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும்.

அதேவேளை, அரசாங்கமானது நீதித்துறை, சட்டமா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் என்பவற்றை சவாலுக்கு உட்படுத்தும் செயற்பாடுகளையும் நிறுத்த வேண்டும். நீதி அமைச்சர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றிய சிரேஷ்ட அதிகாரியும் சட்டத்தரணியுமாவார்.

அவர் அரசியல் பயணத்தை நிறைவு செய்யும் போது மீண்டும் தொழில் நிமித்தம் நீதிமன்றம் செல்ல வேண்டியேற்படும்.

எனவே, முன்னர் தான் பணியாற்றிய சட்டமா அதிபர் திணைக்களத்தை சவாலுக்குட்படுத்துவதை நீதி அமைச்சர் தவிர்த்துக் கொள்வார் என்று எதிர்பார்க்கின்றோம்.

கிரிஷ் நிறுவனத்துக்கும் எனக்கும் நகர் போட்டிக்காக அனுசரணை பெற்றுக் கொண்டமை தொடர்பிலேயே தொடர்பிருக்கிறது.

அது சட்ட ரீதியான கொடுக்கல் வாங்கலாகும். எவ்வாறிருப்பினும் அதனை அரசியல் பழிவாங்கலுக்காக இந்த அரசாங்கம் பயன்படுத்துகிறது என்றார்.

# நான்கு பதில் அமைச்சர்கள் நியமனம்

பின்வரும் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட பதில் அமைச்சர்களின் விபரங்கள் பின்வருமாறு. டிஜிட்டல் பொருளாதார பதில் அமைச்சராக, டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். பதில் பாதுகாப்பு அமைச்சராக, பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர நியமிக்கப்பட்டுள்ளார். நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராக, தொழிலாளர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராக, வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரது அமைச்சர் அருண் ஹேமசந்திர நியமிக்கப்பட்டுள்ளார்

# விலைகள் வீழ்ச்சியால் சிரமத்தில் உற்பத்தியாளர்கள்

ஒரு முட்டையின் விலை ரூ.30க்கும் குறைவாகவும், சூப்பர் மார்க்கெட்டுகளில் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 750 ரூபாய் முதல் 850 ரூபாய் வரையிலும் இருப்பதாகவும் கோழிப்பண்ணை வியாபாரிகள் கூறுகிறார்கள்.

ஏனைய சில்லறை விற்பனை நிலையங்களில் கோழி இறைச்சியின் விலை 900 ரூபாய் ஆகக் குறைந்துள்ளதாகவும், தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சியின் விலை 1,000 ரூபாய் முதல் 1,100 ரூபாய் வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும் கோழி உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர். அத்துடன், கால்நடை தீவனமாக மக்காச்சோளத்தை மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அகில இலங்கை கோழிப்பண்ணை வியாபாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயணமானார் ஜனாதிபதி அனுர

எதிர்கால நோக்கிலான பிரவேசங்கள், தொழில்நுட்ப புத்தாக்கம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்தும் கருத்தாடலை ஏற்படுத்த உலகத் தலைவர்களை ஒரே மேடையில் அமர்த்துவதே உலகத் தலைவர்கள் மாநாட்டில் முக்கிய நோக்கமாகும். இந்த மாநாட்டில் மனித சமூகம் தற்காலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், எதிர்கால முன்னேற்றங்கள், புதிய வாய்ப்புகள் தொடர்பில் நாடுகளுக்கிடையில் கருத்து பரிமாறிக்கொள்ளப்படவுள்ளது. இதில் 150 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி 4,000ற்கும் அதிகமானவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

உலகத் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவிருக்கும் பல நாட்டுத் தலைவர்கள் மற்றும் அரசாங்க பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயிட் அல் நஹியன் ஆகியோருக்கு இடையிலான இருதரப்பு சந்திப்பும் இதன்போது நடைபெறவுள்ளதுடன், அதனூடாக இரு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு துறை சார்ந்த ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக்கொள்ளவும் இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

இந்த மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, ஐக்கிய அரபு இராச்சியத்தின் உப ஜனாதிபதி மற்றும் பிரதமர் செயிக் மொஹமட் பின் ரஷீட் அல் மக்டூமையும் சந்திக்கவுள்ளார்.

இலங்கைக்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, வலுசக்தி, சுற்றுலா, நிதி மற்றும் ஊடகத் துறைகளில் முன்னணியில் உள்ள உலக நிறுவனங்களின் நிறைவேற்று அதிகாரிகள் பலருடன் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கலந்துரையாடவுள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி ஆகியோரும் இந் விஜயத்தில் இணைந்துள்ளனர்.

# முன்னாள் எம்.பிக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கருத்து தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, அரகலய போராட்டம் இடம்பெற்ற காலப்பகுதியல் தங்களது இல்லங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடாக அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 122 கோடி ரூபாவுக்கு அதிகமான தொகையைப் பெற்றுள்ளனர். அரசாங்கத்திடமிருந்து இவ்வாறான இழப்புகளுக்காக 25 இலட்சம் ரூபாவினையே உயர்ந்த பட்ச இழப்பீடாக வழங்க முடியும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 முதல் 10 இலட்சம் ரூபாய் வரையிலே இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

யுத்தத்தில் தாக்குதலுக்கு உள்ளான வீடுகளுக்கு அதிகபட்சமாக 16 இலட்சம் ரூபாவே வழங்கப்பட்டுள்ளதுடன், சிலருக்கு எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை.

எனினும், கெஹெலிய ரம்புக்வெல்ல 900 இலட்சம் ரூபாவினை பெற்றுள்ளார். அந்த நிதியில் கிளிநொச்சியில் ஒரு கிராமத்தை அபிவிருத்தி செய்திருக்க முடியும்.

இத்தகைய சேதங்களுக்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என்பதுடன் இந்த இழப்பீடுகள் முற்று முழுதாக கையூட்டலாகவே வழங்கப்பட்டுள்ளன.

எனவே, இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலை, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# ஹிருணிகாவின் பிடியாணையை திரும்பப் பெறுமாறு உத்தரவு

போராட்டம் ஒன்றை மேற்கொண்ட சம்பவத்துக்கு எதிரான வழக்கு ஒன்று தொடர்பில் நீதிமன்றில் ஆஜராகாமல் இருந்து வந்தநிலையிலேயே இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. குறித்த வழக்கு விசாரணை திங்கட்கிழமை (10) காலை எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சந்தேகநபரான ஹிருணிகா பிரேமச்சந்திர நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதால், அவரைக் கைது செய்து ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி பிடியாணை பிறப்பித்திருந்தார்.

பின்னர் மனுவொன்றை சமர்ப்பித்து, நீதிமன்றத்தில் ஆஜராகிய ஹிருணிகா பிரேமச்சந்திர, தனக்கு பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை திரும்பப் பெறுமாறு தனது சட்டத்தரணி மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். அதன்படி, அந்த பிடியாணையை திரும்பப் பெற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# மீண்டும் பயணிகள் கப்பல் சேவை

எதிர்வரும் புதன்கிழமை (12) காலை 7.30 மணியளவில் நாகப்பட்டினத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் கப்பலானது, காங்கேசன்துறையை வந்தடைந்த பின்னர் மீண்டும் பி.ப. 1.30 மணியளவில் காங்கேசன்துறையில் இருந்து பயணத்தை ஆரம்பித்து நாகபட்டினத்தை சென்றடையும்.

இந்த கப்பல் சேவையானது செவ்வாய்க்கிழமை தவிர்ந்து வாரத்திற்கு ஆறு நாட்கள் இயக்கப்படும் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

# 2 பஸ்கள் மோதி விபத்து: நால்வர் உயிரிழப்பு

விபத்தில் காயமடைந்த 20க்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்காக குருநாகல் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர், அங்கு மூன்று ஆண்களும் ஒரு பெண்ணும் உயிரிழந்தனர். இதுவரை நடத்தப்பட்ட விசாரணையில், நிறுத்தப்பட்டிருந்த பேருந்தின் பின்னால் இருந்து வந்த பேருந்து அதிவேகமாக இயக்கப்பட்டதால் விபத்து ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது.

இறந்தவர்கள் மற்றும் இறந்த பெண்ணின் அடையாளங்கள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. சடலங்கள் குருநாகல் மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், தொரடியாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொலிஸ் உயர் பதவிகளில் இடமாற்றம்

போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பி.லியனகே உடன் அமுலுக்கு வரும் வகையில் மேல் (வடக்கு) மாகாணத்தை மேற்பார்வையிடுவதற்கான பிரதி பொலிஸ் மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.வை.செனவிரத்ன இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய இரு மாவட்டங்களையும் மேற்பார்வையிடும் விசேட கடமைகளையும் ஏற்றுக்கொள்வார்.

12.02.2025 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மேற்படி உயர் பதவிகளில் உள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# தையிட்டி விகாரைக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் போராட்டம்

யாழ். தையிட்டி பகுதியிஜல் சட்டவிரோதமாக விகாரை அமைந்துள்ளமைக்கும் அதனை சூழவுள்ள தமது காணிகளை மீள கையளிக்க கோரியும் காணி உரிமையாளர்கள் செவ்வாய்க்கிழமை (11) மற்றும் புதன்கிழமை (12) ஆகிய இரு நாட்களிலும் தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

தையிட்டி பகுதியில் உள்ள சுமார் 07 ஏக்கர் காணியை அடாத்தாக கையகப்படுத்தி, எவ்வித அனுமதிகளும் இன்றி சட்டவிரோதமாக திஸ்ஸ விகாரை எனும் விகாரை கட்டப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் இருந்த மக்கள் யுத்தம் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு கால பகுதியில் அங்கிருந்து வெளியேறியிருந்தனர். பின்னர் அப்பகுதியை உயர்பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினர் பிரகடனப்படுத்தியிருந்தனர்.

யுத்தம் நிறைவடைந்த நிலையில், மக்கள் மீள்குடியேற, இராணுவத்தினர் கட்டம் கட்டமாக அனுமதித்தனர்.

தற்போது விகாரை அமைந்துள்ள மற்றும் அதனை சூழவுள்ள சுமார் 14 ஏக்கர் காணியில் மக்கள் மீள் குடியேற இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

குறித்த பகுதியில் எவ்வித அனுமதிகளும் இன்றி, யாழ். மாவட்ட மற்றும் தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் விகாரையின் கட்டுமான பணிகளை நிறுத்தி, அப்பகுதிகளை மக்களிடம் மீள ஒப்படைக்குமாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும், காணிகள் மீள கையளிக்கப்படாது, இராணுவத்தினரின் உதவியுடன் விகாரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

குறித்த விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனை சூழவுள்ள காணிகளான 14 ஏக்கர் காணியையும் காணி உரிமையாளர்களிடம் மீள கையளிக்க வேண்டும் என காணி உரிமையாளர்கள் சுமார் ஒரு வருட காலத்திற்கு மேலாக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.






இந்நிலையில், செவ்வாய்க்கிழமை(11) மற்றும் புதன்கிழமை(12) ஆகிய இரு நாட்களும் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அதற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு தெரிவித்து போராடத்தில் ஈடுபட வேண்டும் என காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணி உரிமையாளர்களின் கோரிக்கையை அடுத்து , பல்வேறு தரப்பினரும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனை சூழவுள்ள சுமார் 14 ஏக்கர் காணியும் விகாரைக்கு வழங்க வேண்டும் எனவும், அதில் யாத்திரிகள் தங்குமிடம், மடாலயங்கள் , பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளதாக அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் என்ற அமைப்பு யாழ். மாவட்ட செயலரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

# “தையிட்டி விகாரயை உடைப்பதற்கு ஐ.த.தே. கூட்டணி முழு ஆதரவு”

■ க.அகரன்

யாழ். தையிட்டி விகாரைக்கு எதிராக அதற்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டத்துக்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி முழுமையான ஆதரவு வழங்கும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். அத்துடன், தையிட்டி விகாரை உடைக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் திங்கட்கிழமை (10) வவுனியாவில் நடைபெற்றுள்ளது அதன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுயார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

யாழ். தையிட்டி விகாரைக்கு எதிராக நடத்தப்படவுள்ள போராட்டத்துக்கு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கும். அது உண்மையில் உடைக்கப்படவேண்டிய விடயம். வடகிழக்கில் பிக்குகள் மற்றும் சில திணைக்களங்கள் நினைத்ததை செய்யும் ஒரு நிலை காணப்படுகிறது.

எனவே, இந்த விகாரை உடைக்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அதற்கான ஆதரவை நாங்கள் வழங்குவோம். மக்களுடைய விருப்பமும் அதுவே என குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள மற்றும் அதனை சூழவுள்ள தமது காணிகளை மீள கையளிக்க கோரி காணி உரிமையாளர்கள் செவ்வாய்க்கிழமை(11) மற்றும் புதன்கிழமை (12) ஆகிய இரு நாட்களிலும் தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.



# சிவனாலய மகா கும்பாபிஷேகம்

■ வி.ரி.சகாதேவராஜா

மட்டக்களப்பு - செட்டிபாளையம் சிவன் ஆலய மகா கும்பாபிஷேகம் ஞாயிற்றுக்கிழமை (9) அன்று கோலாகலமாக நடைபெற்றது.

கடந்த புதன்கிழமை(05) கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகி எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் 7ஆம் 8ஆம் திகதிகளில் நடைபெற்றது.

தொடர்ந்து மகா கும்பாபிஷேகம் ஞாயிற்றுக்கிழமை (09) அன்று கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்தமூர்த்தி குருக்கள் முன்னிலையில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.ஜனார்த்தனன் சர்மா தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் சித்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.





















# மதுபானம் விற்பனை செய்த பெண் கைது



■ பு.கஜிந்தன்

நீண்ட காலமாக சட்ட விரோதமான முறையில் மதுபானத்தை விற்பனை செய்த பெண் ஒருவர் திங்கட்கிழமை (10) அன்று, 27 மதுபான போத்தல்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் போதைப்பொருள் தடுப்பு பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியை சேர்ந்த சந்தேக நபரான பெண் கால் போத்தலை 1,000 ரூபாய்க்கு விற்பனை செய்து வந்ததாக தெ ரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# “முறைகேடாக வழங்கப்பட்ட நிதி மீளப் பெறவேண்டும்”

■ வ.சக்தி



“ஜனாதிபதி நிதியத்திலிருந்து முறைகேடாக நிதியைப் பெற்று இருக்கிறார்கள் என்றால் அந்த நிதியை மீளப் பெற வேண்டும், மதுபான சாலைகளுக்கு சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தால் அந்த அனுமதிப் பத்திரங்கள் இரத்து செய்ய வேண்டும்” என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு எருவில் கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தால் ஞாயிற்றுக்கிழமை (09) அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசியல்வாதிகளுக்கு மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. வழங்கப்பட்ட பட்டியலையும் வாசித்தார்கள், அதற்குப் பிறகு எந்த நடவடிக்கையையும் காணவில்லை. ஜனாதிபதி நிதியத்தில் இருந்து அரசியல்வாதிகள் பணம் பெற்றதாக ஒரு பட்டியல் வாசிக்கப்பட்டது. அதன் பின்னர் ஒன்றும் நடைபெறவில்லை, பட்டியல்களை அனைவரும் வெளியிடலாம் ஆனால் அவர்களிடம் இருக்கின்ற பணத்தை மீளப்பெற வேண்டும். மக்களுடைய பணத்தை முறைகேடாக நஷ்டஈடாக எடுத்து இருக்கிறார்கள் என்றால் அரசாங்கத்தில் இருக்கின்றவர்கள் பட்டியல்களை வெளியிட்டால் மாத்திரம் போதாது. நிதியைப் பெற்றவர்களிடம் இருந்து மீள அந்த நிதியைப் பெற வேண்டும். அதனைப் பெற்று மக்களுக்கு வழங்க வேண்டும்.

முறைகேடாக ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதியைப் பெற்று இருக்கிறார்கள் என்றால் அந்த நிதியை மீளப் பெற வேண்டும் மதுபான சாலைகளுக்கு சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தால் அந்த அனுமதிப் பத்திரங்கள் இரத்து செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் வந்து பட்டியல்களை வாசிப்பதன் ஊடாக மக்களுக்கு மக்கள் எதிர்பார்த்த ஊழல் மோசடிகளை அழிப்பதற்கு முடியாது என்பதில் மக்களுக்கு நம்பிக்கை வராது.

இந்த அரசாங்கத்தைக் குழப்புவதற்கோ, அரசாங்கத்திற்கு எதிராகக் கருத்துக்களை வெளியிடுவதற்காக நாங்கள் வரவில்லை. சில ஊடகங்கள் அரசாங்கத்தினுடைய எல்லா விடயங்களையும் சரி என்னும் அளவிற்கு வந்து தான் இருக்கின்றன. அது கவலையான விடயம் அரச ஊடகம் என்றாலும் சமமாகச் செய்திகளை வெளியிட வேண்டும்.

அந்த வகையிலே எதிர்வரும் காலங்களில் நாட்டிலே புதிய அரசியல் அமைப்பு ஒன்று வரும் என்பதை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் ஜனாதிபதி அவர்களும் நாட்டிலே புது ஒரு புதிய அரசியலமைப்பு கொண்டு வருவோம் என கூறியிருக்கின்றார்” என்றார்.

# கச்சேரி சுற்றி வளைப்பு; தம்பதியினர் கைது

ஹொரணை, போருவதண்ட பகுதியில் இயங்கி வந்த சட்டவிரோத போலி கச்சேரி ஒன்றைச் சுற்றி வளைத்து, தேசிய அடையாள அட்டைகள், வாகன வருமான வரி அனுமதிப் பத்திரங்கள் மற்றும் அவற்றைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் உள்ளிட்ட போலி ஆவணங்களுடன் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெற்கு கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, ஹொரணையின் பொருவதந்த பகுதியில் உள்ள சந்தேக தம்பதியினரின் வீட்டைச் சோதனை செய்தபோது,

எட்டு போலி தேசிய அடையாள அட்டைகள், மூன்று காப்பீட்டுச் சான்றிதழ்கள், சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடப் பயன்படுத்தப்படும் 12 அட்டைகள், 03 வாகன வருமான வரி சான்றிதழ்கள், 03 புகை பரிசோதனை சான்றிதழ்கள், 01 மீளப் பெறும் சான்றிதழ்கள், டீ. வீ. டீ , சீ.சீ -48. , ஒரு மடிக்கணினி மற்றும் 03 கைத்தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பின்னர், சந்தேகத்திற்கிடமான தம்பதியினர் தங்கியிருந்த வீட்டைச் சோதனை செய்தபோது, ஒரு வண்ண அச்சுப்பொறி, ஒரு லெமினேட்டிங் இயந்திரம்,

**“ பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட உத்தியோகபூர்வ முத்திரைகளில் மினுவாங்கொடை, மின்னேரிய, புத்தளம், ஹிங்குராங்கொடை மற்றும் படபொல உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த பிரதேச செயலாளர்கள் மற்றும் காப்பீட்டு முகவர்களின் முத்திரைகள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது**

ஒரு ஸ்கேனர், ஒரு பாலிமர் சீல் தயாரிக்கும் இயந்திரம் மற்றும் போலி சான்றிதழ்கள் அச்சிடப் பயன்படுத்தப்படும் மை, மோட்டார் போக்குவரத்து ஆணையர், நிதி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் 28 அதிகாரப்பூர்வ முத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட உத்தியோகபூர்வ முத்திரைகளில் மினுவாங்கொடை, மின்னேரிய, புத்தளம், ஹிங்குராங்கொடை மற்றும் படபொல உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த பிரதேச செயலாளர்கள் மற்றும் காப்பீட்டு முகவர்களின் முத்திரைகள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இறந்த நிலையில் சிறுத்தை மீட்பு

ஹட்டன், மேஃபீல்ட் தோட்டத்தில் தலையில் பலத்த காயங்களுடன் சிறுத்தையின் சடலம் ஒன்றை வனவிலங்கு அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

நல்லத்தண்ணி வனவிலங்கு அலுவலக அதிகாரிகளின் கூற்றுப்படி, மூன்று வயதுடைய சிறுத்தை, வாகனம் மோதியதால் அல்லது தாக்குதலினால் காயங்களுக்குள்ளாகியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. திம்புள்ள-பத்தனை பொலிஸார் மூலமாக கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து, தேயிலைத் தோட்டத்தில் சடலம் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், ஹட்டன் நீதவானின் உத்தரவின் பேரில், இறப்புக்கான சரியான காரணத்தைக் கண்டறியச் சிறுத்தையின் சடலம் பிரேத பரிசோதனைக்காக ரந்தெனிகல வனவிலங்கு கால்நடை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

# 8 மில்லியன் ரூபாய் மோசடி

அரியகுளத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கடத்தி, 8 மில்லியன் ரூபாய் நிதி மோசடி செய்த வழக்கில், ஒரு பெண் உட்பட நான்கு சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, குறித்த இளைஞன் வேலைக்காக ஐரோப்பா செல்ல திட்டமிட்டிருந்தான், மேலும் ஒரு பெண் அவனை அணுகி, 8 மில்லியன் ரூபாய் கொடுத்தால் இரண்டு வாரங்களுக்குள் அவனை அழைத்துச் செல்வதாக உறுதியளித்துள்ளார்.

சில நாட்களுக்குப் பிறகு, அந்தப் பெண், மேலும் மூன்று பேருடன் சேர்ந்து, ஒரு வாகனத்தில் அந்த இளைஞரின் வீட்டிற்கு வந்து, அவரைக் கடத்திச் சென்று, அவரது வங்கிக் கணக்கிலிருந்து பணத்தைத் தனது வங்கிக் கணக்கிற்கு மாற்றியுள்ளார்.

பின்னர் சந்தேக நபர்கள் பாதிக்கப்பட்டவரை கோப்பாயில் உள்ள ஒரு வெறிச்சோடிய பகுதியில் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

விசாரணையைத் தொடர்ந்து, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் குற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

# உயிர் வாழ்வதற்கான மிகப்பெரிய பொறுப்பு நமக்கு இருக்கிறது

விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நினைவு தினமாக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தின் 3ஆவது ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்படுகிறது. இந்த நாள் ஐ.நா. சபை மற்றும் உலக சுகாதார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வதேச நாளாகும்.

உலகில் ஒவ்வொரு 24 வினாடிக்கும் ஒருவர் வீதி விபத்துகளால் இறக்கிறார். நம் நாட்டில் ஒரு நாளைக்கு 6 முதல் 8 இறப்புகள் வரை இது அதிகரித்துள்ளது. எனவே, இலங்கையின் தேசிய மருத்துவமனையாக, விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நினைவு தினத்தில் இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் நினைத்தோம். ஐந்து பகுதிகளின் கீழ் இதுபோன்ற விழிப்புணர்வை ஏற்படுத்த நாங்கள் உந்துதல் பெற்றோம். விபத்துகளில் படுகாயமடைந்து உயிரிழந்தவர்களை நினைவு கூர்தல், விபத்துகளில் சிக்கியவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் சுகாதார ஊழியர்களின் மதிப்பீடு, விபத்துகள் தொடர்பாக தற்போதுள்ள சட்டத்தை அமல்படுத்துதல், விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் சிறந்த ஆதரவை வழங்குதல், விபத்துகளைத் தடுக்க தரவு சார்ந்த செயல்முறையை உருவாக்குங்கள், விபத்தில் சிக்கிய ஒரு நோயாளி வழக்கமாக எந்த மருத்துவமனைக்கும் அம்பியூலன்ஸ் அல்லது தனியார் வாகனம் மூலம் கொண்டு வரப்படுவார், நோயாளிகள் இலங்கை தேசிய மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அதே வழியில் கொண்டு வரப்படுகிறார்கள். அப்படிப்பட்ட எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எங்கள் தாதி ஊழியர்கள் நோயாளியை ஏற்றுக்கொள்வார்கள்.

அதிக ஆபத்து என வகைப்படுத்தப்பட்ட நோயாளிகள் விரைவாக அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு உடனடி சிகிச்சை தொடங்கப்படுகிறது. சில நேரங்களில், நோயாளிகளின் கடுமையான நிலைமைகள் வெளிப்புறமாகத் தெரியாவிட்டாலும், நோயாளியின் உள் நிலை மோசமாக உள்ளது என்பது புரிந்துகொள்ளப்படும்போது, அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் விரைவாக அனுமதிக்கப்படுகிறார்கள்.

விபத்துக்குப் பிறகு ஒரு நோயாளி அனுமதிக்கப்பட்டவுடன், அவசர சிகிச்சைப் பிரிவின் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இளைய ஊழியர்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட சிகிச்சையை வழங்குவதில் ஆதரவை வழங்குகிறார்கள். இலங்கை தேசிய மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு 24 மணி நேரமும் இதற்காக நன்கு தயாராக உள்ளது. பணியில் உள்ள மருத்துவர்கள் அனைத்து அடிப்படை சிகிச்சை மற்றும் சோதனை அறிக்கைகளையும் (எக்ஸ்-கதிர்கள், வயிற்று ஸ்கேன், எம்ஆர்ஐ மற்றும் சிடி ஸ்கேன்) பெற்று நோயாளியின் காயத்தின் தன்மையை பகுப்பாய்வு செய்கிறார்கள்.

பெரும்பாலும், விபத்துக்குப் பிறகு உடனடியாக நோயாளியுடன் வருபவர்கள் பீதியடைந்த நிலையில் நடந்து கொள்கிறார்கள். சில நேரங்களில் அவர்கள் உணர்ச்சிவசப்படுவார்கள். இதுபோன்ற நடத்தை ஏற்படும்போது, அவசர சிகிச்சைப் பிரிவு ஊழியர்கள் அதைக் கட்டுப்படுத்த அதிக நேரம் செலவிட வேண்டியிருக்கும். நோயாளியின் உயிருக்கு நமக்கு மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது.

குடிமக்களாக, போக்குவரத்து விதிகளை கடைபிடியுங்கள்.வாகனம் ஓட்டும்போது சீட் பெல்ட் அணியுங்கள்.மோட்டார் சைக்கிள் ஓட்டும்போது பூட்டிய தலைக்கவசத்தை அணியுங்கள். வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்துங்கள். குடிபோதையில் வாகனம் ஓட்டாதீர்கள். தூக்கத்தில் வாகனம் ஓட்டுவதைத் தவிர்க்கவும். வாகனம் ஓட்டும்போது உங்கள் செல்போனைப் பயன்படுத்த வேண்டாம் என்பதே எமது அறிவுறுத்தலாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

## எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

காலப் பெருவெள்ளம் அனைவரையும் உலுக்கிவிடலாம். ஆனால், இதனுடன் மக்கள் அனைவரும் சங்கமிப்பதே இல்லை. இவற்றை வென்றுதான் உலகம் இயங்குகின்றது. தொடர்ந்து தூங்கினால் விழிப்பது எப்போது?

இயற்கை பலவழிகளில் மக்களுக்குப் புத்துணர்ச்சியை அளித்துக்கொண்டு இருக்கும். சோம்பேறிகளால் மட்டுமே சிரமப்பட முடியும்.

இயங்குபவர்களே உலகை ஆட்கொள்கின்றார்கள். தன்னையும் வளர்த்து, பூமித் தாயையும் பொறுப்பில் எடுப்பவர்களே, உண்மையான உலக மாந்தர்கள் ஆவார்கள்.

மிகவும் நலிவுற்றவர்கள், காலப்போக்கில் எங்கள் கண் முன்னே உயர்நிலையை அடைந்து விடுகின்றார்கள். வறுமை, பிரச்சினைகளைச் சொல்லியபடி இருக்க முடியாது. எழுவது எப்படியென அறிந்துகொண்டு, உடன் செயற்பட்டால் எல்லாப் பிரச்சினைகளும் பஸ்மமாகிவிடும். உலகம் ஒரு வீடு என்பதை மறத்தலாகாது. பூமியை நேசிக்க வேண்டும்; இயற்கையைப் பாதுகாக்க வேண்டும்; கடமைகளை மறவாது இருக்க வேண்டும்; இன்பம் பெருகும்.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

# திருந்த வேண்டிய தலைமைகள்

**மொஹமட் பாதுஷா**

'அரசியல்வாதிகளுக்கான அரசியல்' முன் கையெடுத்துள்ள நிலையில், முஸ்லிம்களுக்கான அரசியல் அதாவது சமூகத்தின் நலன்களை முன்னுரிமைப்படுத்திய பிரத்தியேக அரசியல் பற்றிப் பேசி வருகின்றோம். இது காலத்தின் தேவையாகவும் மாறியிருக்கின்றது.

ஒரு தனித்துவமான இன, மத குழுமமாக இருக்கின்ற முஸ்லிம் சமூகம் அந்த அடிப்படையிலேயே தோற்றம்பெற்ற பிரச்சினைகளையும், தங்களுக்கு மட்டுமே உரிய விவகாரங்களையும் பிரத்தியேக வழிமுறை ஒன்றின் ஊடாகவே அணுக வேண்டியிருக்கின்றது. இதற்குப் பொதுப்படையான அணுகுமுறை சரிவராது.

அந்த வகையில், முஸ்லிம்கள் தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பெருந்தேசியக் கட்சிகளுடன் இணைந்து அரசியல் செய்வதற்கு சமாந்திரமாக தமக்கான பிரத்தியேக அரசியல் கட்சிகளையும் ஒழுங்கையும் பேணி வருவது நீண்டகால அடிப்படையில் அவசியமானது.

வாடகை வீடுகளில் தொடர்ந்து வசிப்பதை விடச் சொந்தமாக ஒரு குடிசை வீட்டைத்தானும் கட்டிக் கொள்வது நல்லது. அது இக்கட்டான நேரத்தில் உதவுவது மட்டுமன்றி எப்போதும் ஒரு அடைக்கலமாக அமையும். அதுபோலதான் இந்த ஏற்பாட்டையும் பார்க்க வேண்டும்.

முஸ்லிம் சமூகம் இந்த தேவைப்பாட்டை உணர்ந்து கொள்வது மிக முக்கியமானது. கடந்த தேர்தலில் முஸ்லிம் சமூகம் கண்ட நடைமுறைச் சாத்தியமற்ற கனவுகள் கலைய ஆரம்பித்துள்ளதால், முஸ்லிம்களுக்கான அரசியலை மீளக் கட்டியெழுப்புவது அறவே சாத்தியப்படாத விடயம் என்று கூறுவதற்கும் இல்லை.

ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். கொழும்பு போன்ற தென்னிலங்கையின் பல பகுதிகளில் வாழ்கின்ற முஸ்லிம்கள் தங்களுக்காகப் பிரத்தியேக கட்சிகளோ அரசியலோ தேவையில்லை என்று கருதுவதையும் அவ்வாறே கருத்துரைப்பதையும் நீண்டகாலமாகக் கவனிக்க முடிகின்றது.

முஸ்லிம் கட்சிகள் வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்குத்தான் தேவை என்ற கருத்தியலும் நீண்டகாலமாகக் கட்டமைக்கப்பட்டு வந்திருக்கின்றது.

இவ்வாறு அவர்கள் கருதுவதில் நியாயங்கள் இருந்தாலும், ஒரு சமூகமாக நோக்குகின்ற போது இது ஆரோக்கியமான கருத்தியல் இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம் அரசியல் என்று நாம் பேசிக் கொள்வதில் இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒன்று, முஸ்லிம் கட்சிகளை மையப்படுத்திய அரசியல். இரண்டாவது, வேறு கட்சிகளில் இருந்து கொண்டு முஸ்லிம் சமூகத்திற்காக தம்மால் முடியுமான அரசியலை முன்னெடுப்பது. இதில் கட்சிசார் அரசியலே முதன்மையானதும் தனிப் பலம் பொருந்தியதும் ஆகும்.

முஸ்லிம் கட்சிகளை சமூகத்திற்குப் பயன்தரக் கூடியதாக மாற்றியமைப்பதில் இங்கிருக்கின்ற முக்கிய தடை முஸ்லிம் கட்சிகளும் அதன் தலைவர்கள், தளபதிகளும் இன்னும் திருந்தாமல் இருக்கின்றமைதான். தமது கடந்தகால தவறுகளை மீள் வாசிப்புச் செய்து, புதிய ஒழுங்கிற்கு தம்மைத் தகவமைத்துக் கொள்ளாமல் இருக்கின்றமைதான்.

முஸ்லிம்களுக்காக பிரதானமாக மூன்று முஸ்லிம் கட்சிகள் இருக்கின்றன. முஸ்லிம் காங்கிரஸும், மக்கள் காங்கிரஸும் இதில் முக்கியமானவை. தேசிய காங்கிரஸ் மூன்றாவது இடத்தில் இருக்கின்றது.

இது தவிரத் தேசிய ஐக்கிய முன்னணி, ஐக்கிய சமாதான கூட்டமைப்பு என்ற சில சிறு கட்சிகளும் பெயரளவில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

எம்.எச்.எம்.அஷ்ரப் உயிருடன் இருக்கும் வரைக்கும் முஸ்லிம் சமூகம் சரியான வழியில் வழிநடத்தப்பட்டது எனலாம். அவர் மரணித்த பிறகுதான் அந்த தலைமைத்துவ வெற்றிடம் உணரப்பட்டது. இன்று வரை இந்த நிலைமை மாறவில்லை.

அவரது மரணத்திற்குப் பிறகு மு.காவிற்கு இணைத் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். அதன் பின்னர் றவூப் ஹக்கீம் தனியான தலைவராக இன்று வரை பதவி வகித்து வருகின்றார்.

தற்கால முஸ்லிம் அரசியலில் ஹக்கீம் முக்கியமானவர். பாராளுமன்றத்தில் ஒரு கட்சித் தலைவராக, எம்.பியாக அவர் இருக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

ஹக்கீம் மீது பல விமர்சனங்கள் இருந்தாலும், தேசிய ரீதியாக முஸ்லிம்களின் அரசியல் விடயங்களை முன்கொண்டு செல்வதில் அவருக்குள்ள பல்வகை அறிவும் அனுபவமும் குறைத்து மதிப்பிட முடியாதது. ஜனாஸா எரிப்பு தொடர்பான தனிநபர் பிரேரணையைக் கொண்டு வந்தமை அதற்குக் கடைசி எடுத்துக்காட்டாக அமையும்.

ஆனால், முஸ்லிம் காங்கிரஸின் அரசியலை அஷ்ரபின் வழியில் றவூப் ஹக்கீம் செய்யவில்லை. என்றும் வடக்கு, கிழக்கை மையப்படுத்திய முஸ்லிம் காங்கிரஸின் பிரபலமும் மக்கள் செல்வாக்கும் குறைவடைந்து போனதற்கு அஷ்ரபின் பாணியில் ஹக்கீம் செயற்படாமையே முக்கிய காரணம் என்ற குற்றச்சாட்டுப் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

மக்களை ஏமாற்றும் பாணியிலான வாக்குறுதிகளும். முன்னுக்குப் பின் முரணான அரசியல் நகர்வுகளும் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை விலகிச் செல்லும் போக்கும், வடக்கு கிழக்கிற்கு வெளியில் ஒரு விதமாகவும் கிழக்கில் ஒரு விதமாகவும் செயற்படும் தன்மையும் என அவர் மீது ஏகப்பட்ட விமர்சனங்கள் உள்ளன.

இதற்கு அவர் மட்டுமே காரணமல்ல. கடந்த 2000ஆம் ஆண்டில் இருந்து இந்தக் கட்சியின் செயலாளராக, தவிசாளராக, எம்.பியாக இருந்த, இருக்கின்ற எல்லோருக்கும் இதில் பங்குள்ளது. தாங்களும் ஒரு பிராந்தியத்தின் அரசியல் தலைமைகள் என்பதை இவர்கள் விளங்கிச் செயற்படவில்லை.

இதேவேளை, மக்கள் காங்கிரஸ் கட்சிதான் அஷ்ரபின் மரணத்திற்குப் பிறகு பெரு வளர்ச்சி பெற்ற கட்சி என்று சொல்லலாம். இதற்கு முழு முதற்காரணம் அதன் தலைவர் றிசாட் பதியுதீன் ஆவார். வடபுல மக்களுக்கு இப்படியொரு கட்சி அவசியமானது என்பதையும் மறுக்க முடியாது.

றிசாட் பதியுதீன் அடிப்படையில் சமூகம் சார்ந்த பார்வையுள்ளவராக இருந்த போதும் அவருடன் இருந்த அரசியல்வாதிகள் சரிவர அவரை வழிநடத்தவில்லை. ஒவ்வொரு பிரதேசத்திலும் நிலையாகக் கால் ஊன்றுவதற்குப் பதிலாக இலங்கை முழுவதும் கட்சியை வளர்ச்சியடையச் செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

இதனால் மக்கள் காங்கிரஸில் பணம், பதவி விரும்பிகள் என்று சமூகத்திற்குப் பொருத்தமற்ற சிலரும் வந்து இணைந்தனர். முஷாரப் எம்.பியாக தெரிவு செய்யப்பட்டதால், உருவான பலம், சிறிது காலத்திற்குள்ளேயே அக்கட்சியின் மீதான பலவீனமாக மாறிப் போனதையும் அறிவோம்.

ஒரு கட்சி என்றால் எல்லாக் காலத்திலும் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், மக்கள் காங்கிரஸ் கட்சி தேர்தல் மைய அரசியலில் மட்டும் கூடிய கவனம் செலுத்துவதாகத் தெரிகின்றது. கட்சிக்கு ஆள் சேர்ப்பதை விட, இருக்கின்ற களத்தைப் பயன்படுத்தி சமூகத்திற்கான அரசியலை முன் நகர்த்தும் தேவையை றிசாட் எந்தளவுக்கு உணர்ந்திருக்கின்றார் என தெரியவில்லை.

றிசாட் பதியுதீனுக்கு முஸ்லிம் மக்களிடையே ஒரு அனுதாபமும், அபிமானமும் இருந்தது. அவர் மீதான போலிக் குற்றச்சாட்டுக்களும் இதற்குக் காரணமாகக் கொள்ளப்படலாம். இதுதவிர, தனிப்பட்ட இவரது தொடர்புகளும் மக்களுடன் பழகும் விதமும், ஏனையவரின் கருத்துக்குச் செவிமடுக்கும் தன்மையும் சாதகமாக அமைந்துள்ளன.

இதனைப் பயன்படுத்தி கட்சியை முதன்மை நிலைக்குக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால், அது நடக்கவில்லை. கட்சிக்குள் இருந்த சிலரே இதனைச் செய்ய விரும்பவில்லை. இந்தப் பின்னணியில் இப்போது கட்சி ஒருவித தேக்கநிலையில் இருக்கின்றது. முன்னைய எழுச்சி நிலை இல்லை. ஆகவே, மீள் வாசிப்பொன்றை வேண்டி நிற்கின்றது.

முன்னாள் அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் கிழக்கில் மட்டும் அரசியல் செய்யும் ஒரு கட்சியாகும். அதாவுல்லா அதிகாரத்திலிருந்த காலத்தில் இன, மத பேதங்கள் கடந்து எல்லா பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கும் சேவை செய்தார் என்றாலும் அவர் கட்சியை வளர்க்கவில்லை.

அஷ்ரபிற்குப் பிறகு, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாட்டை ஓரளவுக்குச் சரியாக முன்வைத்தவர் அதாவுல்லா எனலாம். வடக்கு, கிழக்கு இணைப்பையும் தமிழ் ஆயுதக் குழுக்களையும் நேரிடையாக எதிர்த்தார். ஆனால், பெருந்தேசியக் கட்சிகளை, இனவாதிகளை ஏனோ அவர் எதிர்க்கவில்லை.

இதுதான் அவர் மீது முன்வைக்கப்படும் பிரதான விமர்சனமாகும்.

மக்களுக்கு நிறைய அபிவிருத்தி சார் சேவைகளைச் செய்துள்ள தேசிய காங்கிரஸ் தலைமை உரிமைகளுக்காகப் பெரியளவில் குரல் கொடுக்கவில்லை. அதிகாரத்திலிருந்த காலத்திலும் இல்லாத காலத்திலும் மக்கள் தொடர்புகளைச் சரிவரப் பேணவில்லை. அவரைச் சூழ இருந்தவர்களும் இதற்குக் காரணம்.

இவ்வாறான காரணங்களால், ஒரு குறிப்பிட்ட ஊர்களுக்குள்ளேயே இக்கட்சி மட்டுப்படுத்தப்பட்டதுடன், கிழக்கு மாகாண சபையில் பல உறுப்பினர்களையும், ஒரு எம்.பியையும் பெற்றிருந்த கட்சி இப்போது மேற்சொன்ன எல்லாவற்றையும் இழந்து நிற்கின்றது.

முஸ்லிம் அரசியலில் எம்.பிக்களாகவும் மாகாண சபை உறுப்பினர்களாகவும் இருந்த பலர் இருந்த இடம் தெரியாமல் போயுள்ளனர். அல்லது, அரசியலில் தலைமறைவாகி இருக்கின்றனர்.

ஆகவே, கட்சித் தலைவர்கள் மட்டுமல்ல, ஏனைய சிறு கட்சிகளை வைத்துக் கொண்டு சீசன் அரசியல் செய்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகளும் தமது அரசியல் போக்குகளை மீளமைத்துக் கொள்ள வேண்டும். அதேபோல், எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த பிராந்திய முஸ்லிம் தலைவர்கள் முன்னாள், இந்நாள் எம்.பிக்கள் பலரும் தம்மை மீள் வாசிப்புச் செய்ய வேண்டியிருக்கின்றது.

எனவே, முஸ்லிம்களுக்கான பிரத்தியேக அரசியலைச் சரியான விதத்தில் மீளக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், எல்லா மட்டங்களிலும் உள்ள முஸ்லிம் அரசியல் தலைமைகள் தம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்

மட்டுமே சமூகத்திற்கான தனித்துவ அரசியலை நோக்கி முஸ்லிம் மக்கள் மீளத் திரும்பி வருவார்கள்.

## கடிதங்கள்



### "உடனடி நடவடிக்கை வேண்டும்"


மட்டக்களப்பு - கிரான் பிரதேச செயலக பிரிவிலுள்ள கல்லடிவெட்டை, கானாந்தனை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள சில கிராமங்களுக்கு செல்லும் அதி உயர் மின்சார தூண்கள் சரிந்து வீழ்ந்து, மின்சார கம்பிகள் அறுந்து கிடப்பதால் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மின்சாரம் இல்லாமல் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதாக பொது மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் இந்த கிராமங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் கல்வி கற்க முடியாமல் போயுள்ளதுடன், யானை மற்றும் காட்டு விலங்குகளின் அட்டகாசங்களுக்கு மத்தியில் தினமும் இரவில் உயிரை கையில் பிடித்தவாறு குப்பி லாம்புடன் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

மின்சார கம்பிகள் அறுந்து நிலத்தில் கிடக்கும் நிலையில், நிலத்தில் மின்சார தாக்கம் ஏற்படும் என்பதால் அந்த பகுதியால் பிரயாணிக்க முடியாமல் உள்ளதுடன்,
இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டும் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக சரிந்து வீழ்ந்த மின்சார தூண்களை சரி செய்து மின்சாரத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- கனகராசா சரவணன்





# யார் இந்த ஆன் ஃபிராங்க்?



றொசில்டா அன்டன்

"எல்லோரையும் பார்த்து சிரி" ஆன் ஃபிராங்க் டயரி ஹிட்லரின் நாஜிப் படை தந்த அச்சுறுத்தலால் யூத குடும்பத்தைச் சேர்ந்த சிறுமி ஆன் ஃபிராங்க் பதுங்கிடத்தில் அடைந்து கிடந்ததாள். ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதம் இல்லை, ஆன் ஃபிராங்க் எத்தனை மாதங்கள் இப்படிப் பதுங்கியிருந்தார் தெரியுமா? கிட்டத்தட்ட 24 மாதங்கள்.

சர்வாதிகாரத்தின் பிடியில் சிக்கியது தொடர்பாக இதுவரை வெளியான புத்தகங்களில் குறிப்பிடத்தக்கது ஆன் ஃபிராங்க் எழுதிய நாட் குறிப்பு. அந்த நாட்குறிப்பு புத்தகத்தில் எழுதிய காலத்தில் ஆன் ஃபிராங்கின் வயது 13. நேரடி வாழ்க்கைப் பதிவான அந்த நாட்குறிப்பு புத்தகத்தில் இரண்டாம் உலகப் போரில் யூதர்கள் சந்தித்த துயரங்களை உலகுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டுவதாக அமைந்திருக்கிறது. இன்றைக்கும் நெருக்கடியில் வாழ்பவர்களின் வாழ்க்கை உலகுக்கு வெளிச்சம் பாய்ச்சுவதாக இந்த நூல் அமைந்திருக்கிறது.

1942 ஜூன் 12 ஆம் திகதி, சிறுமி ஆன் ஃபிராங்குக்கு 13ஆவது பிறந்த நாள். பதின்ம பருவத்தில் காலடி எடுத்து வைத்த அந்தச் சிறுமிக்கு அவளுடைய பெற்றோர்கள் தந்த பரிசு ஒரு புத்தம் புது நாட் குறிப்பு புத்தகம்.

அந்த நாட் குறிப்பு புத்தகம் ஆனுக்கு புதிய வாசலைத் திறந்துவிட்டது. அப்போது அவர்கள் நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாமில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆன் ஃபிராங்கின் தந்தை ஆட்டோ பிராங் நறுமணப் பொருட்கள் விற்பனை வர்த்தகராக இருந்தார்.

ஜேர்மனியைக் கதிகலங்க வைத்துக்கொண்டிருந்த சர்வாதிகார நாஜிக்கள் நெதர்லாந்தையும் கைப்பற்றி இருந்தார்கள். அவர்களுடைய துன்புறுத்தலுக்குப் பயந்து, ஃபிராங்க் குடும்பத்தினர் நான்கு பேரும் மேலும் நான்கு யூதர்களும் இரகசியப் பதுங்கிடத்தில் பதுங்கி வாழ்ந்தார்கள். ஆட்டோ ஃபிராங்கினுடைய நிறுவனம் செயல்பட்டு வந்த கட்டிடத்தின் பின்புறத்தில் இந்தப் பதுங்கிடம் அமைந்திருந்தது. நாஜிப் படையினரால் கண்டறியப்பட்டால், சித்திரவதை முகாம்களில் கொடுமையை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்ற அச்சத்துடனே அவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

பதுங்கியிருந்த காலத்தில் அவர்கள் எந்தக் காரணத்துக்காகவும் வெளியே வரவில்லை. மூன்று பேருக்கான உணவுப் பொருட்களை எட்டுப் பேர் பகிர்ந்துகொண்டு வாழ்ந்து வந்தார்கள்.

## அனைத்தும் எழுத்தில்.......

அவர்கள் வாழ்ந்த பதுங்கிடத்தின் ஜன்னல்களில் கூட கறுப்பு நிறம் பூசப்பட்டிருந்தது. சூரியனையோ வெளியுலகத்தையோ காண்பதற்கு வாய்ப்பில்லை. தோழிகளுடன் ஆன் ஃபிராங்க் விளையாட முடியவில்லை. பள்ளிக்குத் திரும்புவது குறித்து அவள் கனவு கண்டுக்கொண்டே இருந்தாள். இந்தப் பின்னணியில்தான், டயரி எழுதுவதில் அவள் தீவிரமடைந்தாள். தன் சிந்தனைகள் அனைத்தையும் எழுத்தில் வடித்தாள். கிட்டி என்ற கற்பனை நண்பரை உருவாக்கிக்கொண்டு, அவருக்குக் கடிதங்களை எழுதத் தொடங்கினாள். தன்னுடைய அச்ச உணர்வு, சலிப்பு, பதுங்கிடத்தில் வளர்வதில் உள்ள பிரச்சினைகள் போன்றவற்றை அவள் பதிவு செய்திருக்கிறாள்.

இதற்கிடையில் டச்சு அரசு ஒரு வானொலி அறிவிப்பில், மக்களிடம் உள்ள போர் ஆவணங்கள், டயரிக் குறிப்புகளைப் பாதுகாத்து வைக்கும்படி கேட்டுக்கொண்டது. இந்த அறிவிப்பைக் கேட்ட ஆன் ஃபிராங்க் தன் குறிப்பு புத்தகத்தை திருத்தி எழுதத் தொடங்கினாள். இதற்கிடையில் அவர்கள் பதுங்கியிருந்த இடம் நாஜிப் படையால் கண்டறியப்பட்டு விட்டது. தன்னுடைய டயரியில் ஆன் ஃபிராங்க் கடைசியாக எழுதிய நாள் 1944 ஆகஸ்ட் 1.

ஆன் ஃபிராங்குடன் அவளுடைய அப்பா, அம்மா, அக்கா என குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டு சித்திரவதை முகாம்களுக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களுடைய பதுங்கிடம் குறித்து காவல்துறைக்கு யார் தகவல் தந்தது என்பது தெரியவில்லை. சில மாதங்களுக்குப் பிறகு ஆஷ்விட்ஸ் வதை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டதற்கு இடையிலேயே ஆன் ஃபிராங்கும் அவளுடைய அக்கா மர்காட்டும் இறந்தார்கள். அவர்களுடன் பதுங்கியிருந்தவர்களில் ஆனின் தந்தை ஆட்டோ பிராங்க் மட்டுமே உயிர் தப்பினார்.

## வரலாற்றுத் திருப்பம்

இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு ஆனின் டயரியை ஆட்டோ பிராங்க் கண்டறிந்தார். அவர்களுடைய குடும்பத்துக்கு உதவி வந்த மிப் ஷீஸ் என்ற பெண் தன்னுடைய மேசை அலமாரியில் ஆன் ஃபிராங்கின் டயரியைப் பாதுகாத்து வைத்திருந்தார். அந்த டயரியைப் படித்தபோது பிற்காலத்தில் எழுத்தாளராக, பத்திரிகையாளராக வர வேண்டுமென ஆன் பிராங்க் விரும்பியதைத் தெரிந்துக் கொள்ள முடிந்தது. ரகசியப் பதுங்கிடத்தில் வாழ்ந்தது குறித்த நிகழ்வுகளை பதிப்பிக்க வேண்டுமெனவும் ஆன் பிராங்க் விரும்பியிருந்தாள். 1947 ஜூன் மாதம் 'இரகசியப் பதுங்கிடம்' (The Secret Annex) என்ற நூலை ஆட்டோ பிராஙக் பதிப்பித்தார்.

அதற்குப் பிறகு வரலாற்றில் அதிகம் வாசிக்கப்பட்ட புனைவற்ற நூல்களில் ஆன் ஃபிராங்கின் டயரிக் குறிப்பும் ஒன்றாக இடம்பிடித்தது. இன்றைக்கு 3 கோடிக்கும் அதிகமான பிரதிகள் விற்பனையாகியுள்ளன. ஆன் ஃபிராங்கின் டயரிக் குறிப்புப் புத்தகம் 70க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழிலும் வெளியாகியுள்ளது (எதிர் வெளியீடு). இந்த டயரியைத் தவிர கட்டுரைகள், கடிதங்கள், சிறுகதைகள், நாவல் போன்றவற்றையும் ஆன் ஃபிராங்க் எழுதியுள்ளார்.

## மண்டேலாவின் பரிந்துரை

தென்னாப்பிரிக்க விடுதலைக்காகப் போராடிய நெல்சன் மண்டேலா, ராபன் தீவுச் சிறையில் 18 ஆண்டுகள் கழித்தார். அப்போது ஆன் ஃபிராங்கின் டயரியை வாசித்து நம்பிக்கை பெற்றார். அத்துடன் சக சிறைவாசிகளிடம் அந்தப் புத்தகத்தை வாசிக்குமாறும் கேட்டுக்கொண்டிருந்தார்.

ஆன் ஃபிராங்கின் நாட் குறிப்பு உலகெங்கும் ஒடுக்கப்படுபவர்கள் படும் துயரங்களைப் பிரதிபலிப்பபதாக உள்ளது. அதேநேரம் இன்றைக்கும் நம்பிக்கையின், மீட்சியின் அடையாளமாகவும் அந்த நூல் கருதப்படுகிறது.

ஆனி மாதம் 12 அன்று ஆன் ஃபிராங்க் 96ஆவது பிறந்த நாள் 2025 ஆஷ்விட்ஸ் வதை முகாம் 80ஆவது ஆண்டு)

ஆனி பிராங்க் நாட் குறிப்பில் இருந்து சில வரிகள்

* நமக்குள் எழும் கனவுகளும் நம்பிக்கைகளும் நம்மைச் சுற்றி நடக்கும் உண்மையான உலகில் நசுக்கப்படுவது சில நேரங்களில் ஏற்றுக்கொள்ளக் கடினமானதாக இருக்கிறது. என்னுடைய எல்லா ஆசைகளையும் அவை நடைமுறைப்படுத்த வாய்ப்பேயில்லாத அபத்தமானவையாக இருந்தாலும் கைவிடவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. நான் அவற்றைக் கைவிடாமல் வைத்திருப்பதற்கான காரணம், என்ன நடந்தாலும் மனிதர்கள் அவர்களுடைய மனதளவில் நல்லவர்கள் என்று நம்புகிறேன்.

* நான் பெரும்பாலானவர்கள்போல வீணாக வாழ விரும்பவில்லை. மற்ற மக்களுக்கு, இதுவரை சந்தித்திராத மனிதர்களுக்கும் ஏதேனும் வகையில் பயன்பட வேண்டும்; அவர்களிடத்தில் மகிழ்ச்சியைக் கொண்டுவர வேண்டும் என்று விரும்புகிறேன். என் இறப்புக்குப் பிறகும் அப்படியே இருக்க விரும்புகிறேன்.

யூதர்களானாலும் சரி, யூதர்கள் அல்லாதவர்களானாலும் சரி நான் மகிழ்வான வேடிக்கைகளை விரும்பும் ஒரு சிறிய பெண் என்பதைப் புரிந்துக்கொள்வார்களா?

இந்த உலகை முன்னேற்ற யார் விரும்பினாலும், அவர் ஒரு நிமிடம் கூட தாமதிக்க தேவையில்லை என்பது எவ்வளவு அருமையான உண்மை.

ஆனி பிராங்க் டயரி புத்தகமாக

ஏறத்தாழ 70 க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்கப்பட்டுள்ளது. தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் இருபதாம் நூற்றாண்டில் வெளியான தலைசிறந்த புத்தகங்களுள் முதன்மையானதாக கருத்தப்படுகிறது.



# மீண்டும் விபத்தில் சிக்கிய அஜித்



நடிகர் அஜித்குமார் கார் ரேஸ் பயிற்சியில் ஈடுபட்டபோது விபத்தில் சிக்கியதாக தெரிவித்துள்ளார்.

விடாமுயற்சி, குட் பேட் அக்லி திரைப்படங்களுக்கு நடுவே நடிகர் அஜித்குமார் வீனஸ் மோட்டர்ஸ் டூர்ஸ் என்கிற தன் இருசக்கர பயண நிறுவனத்தை ஆரம்பித்தார்.

இருசக்கர வாகனத்தில் தொலைத்தூரப் பயணங்களைத் திட்டமிடுபவர்களுக்கான தளமாக இது செயல்பட்டுவருகிறது. இதைத் தொடர்ந்து 'அஜித் குமார் ரேஸிங்' என்கிற கார் பந்தயத்திற்காக சர்வதேச அளவிலான வீரர்களை ரேஸிங்கில் ஈடுபட வைக்கும் நோக்கில் செயல்பட்டு வருகிறார்.

அண்மையில், டுபையில் நடைபெற்ற கார் பந்தயத்தில் மூன்றாம் இடம் பிடித்து அசத்தினார். தற்போது, ஸ்பெயினின் பார்சிலோனா கார் பந்தயத்தில் பங்கேற்பதற்காக அங்கு தன் குழுவினருடன் கார் ரேஸ் பயிற்சியில் ஈடுப்பட்டு வருகிறார்.

இந்த நிலையில், பேட்டி ஒன்றில் பேசிய அஜித், "எங்களுக்கு மற்றுமொரு நல்ல நேரம் அமைந்துள்ளது. இங்கு பயிற்சியின்போது மீண்டும் விபத்தில் சிக்கினேன். ஆனால், அதிர்ஷ்டவசமாக எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. விபத்து நடந்ததும் குழுவினர் விரைவாக செயல்பட்டு மீட்டனர். தற்போது, மீண்டும் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறோம்" என்றார்.

முன்னதாக, துபையில் பயிற்சியின்போது அஜித்தின் கார் விபத்தில் சிக்கி நொறுங்கியது குறிப்பிடத்தக்கது.

# மம்முட்டி- மோகன்லாலுடன் இணையும் நயன்தாரா

மம்முட்டி- மோகன்லால் மீண்டும் இணைந்து நடிக்கும் படத்தில் நடிகை நயன்தாரா இணைந்துள்ளார்.

மலையாள நடிகர்கள் மம்முட்டி, மோகன்லால் இருவரும் இதற்கு முன் அதிராத்ரம், அனுபந்தம், வர்தா, கரியில காட்டு போல, அடிமகள் உடமகள், ஹரிகிருஷ்ணன்ஸ், டுவென்ட்டி 20 ஆகிய படங்களில் இணைந்து நடித்திருந்தனர்.

தற்போது 16 ஆண்டுகளுக்குப் பிறகு இருவரும் மீண்டும் இணைந்து நடிக்கின்றனர். இந்த படம் அவர்கள் இணையும் 8ஆவது படமாகும். இந்தப் படத்தை 'டேக் ஆப்', 'மாலிக்' படங்களை இயக்கிய மகேஷ் நாராயணன் இயக்குகிறார்.

தற்போது இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

இந்நிலையில், இப்படத்தில் தற்போது நடிகை நயன்தாரா இணைந்துள்ளார். இதனையடுத்து,



அவர் கதாநாயகியாக நடிக்கிறாரா அல்லது முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறாரா என்பது விரைவில் தெரிய வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பிக் பாஸ் பாலாவின் ஃபயர்

பிக் பாஸ் நிகழ்ச்சியின் மூலம் மக்களுக்கு பரீட்சையமான பாலாஜி முருகதாஸ் தற்பொழுது ஃபயர் (Fire) என்ற திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகியுள்ளார். இப்படத்தை அறிமுக இயக்குனரான சதீஷ் குமார் இயக்கியுள்ளார்.

குறித்த படம் 2020 ஆம் ஆண்டு நடந்த நாகர்கோவில் காசி என்ற வழக்கை மையப்படுத்தி கதைக்களம் அமைக்கப்பட்டுள்ளது. காசி என்பவர் காம பித்து பிடித்தவன் எனவும் பெண்களை பாலியல் வன் கொடுமை செய்து அதை படம் பிடித்து அவர்களிடம் மிரட்டி பணம் பறிக்கும் ஒரு குணமுடையவன் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கதாப்பாத்திரத்தில் பாலாஜி முருகதாஸ் நடித்துள்ள நிலையில் இவருடன் சந்தினி தமிழரசன், ரச்சிதா மஹாலட்சுமி, சாக்ஷி அகர்வால், காயத்திரி சான், சிங்கம் புலி மற்றும் பலர் நடித்துள்ளனர். படத்தை ஜேஎஸ்கே பிலிம் கார்ப்ரேஷன் நிறுவனம் தயாரித்துள்ளதுடன் டீ.கே இசையமைத்துள்ளார்.


குறித்த படம் 14 ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாக உள்ள நிலையில் குறித்த படத்தின் மெது மெதுவாய் என்ற பாடல் வெளியாகியுள்ளது. குறித்த திரைப்படம் ரசிகர்களுக்கிடையில் அதிகலவில் பேசபட்டு வருவதுடன் படத்தின் வெளியீட்டுக்காக ரசிகர்கள் ஆர்வத்துடன் காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.




# கோடிகளை குவிக்கும் 'தண்டேல்'

நாக சைதன்யா - சாய் பல்லவி நடிப்பில் கடந்த 2021ஆம் ஆண்டு தெலுங்கில் வெளியான 'லவ் ஸ்டோரி' திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இந்தப் படத்தைத் தொடர்ந்து சந்தூ மொண்டேடி இயக்கத்தில் 'தண்டேல்' படத்தில் இருவரும் மீண்டும் இணைந்துள்ளனர்இ

ப்படத்துக்கு தேவி ஸ்ரீபிரசாத் இசையமைத்துள்ளார். திரைப்படம் நேற்று வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. படத்தில் மீனவராக நடிக்கும் நாக சைதன்யா பாகிஸ்தான் ராணுவத்தால் சிறை பிடிக்கப்படுகிறார். அவருக்கும், சாய் பல்லவிக்குமான காதல் மற்றும் அதைச்சுற்றிய பல்வேறு விஷயங்களை பற்றி இப்படம் பேசியுள்ளது. இந்நிலையில் திரைப்படத்தின் இரண்டு நாள் வசூலை படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி திரைப்படம் உலகளவில் 41.20 கோடி ரூபாயை வசூலித்துள்ளது. அதன்படி திரைப்படம் உலகளவில் 41.20 கோடி ரூபாயை வசூலித்துள்ளது. இன்னும் வரும் நாட்களில் திரைப்படம் கூடுதல் வசூலைப்பெறும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.



மாலி

### கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில்

# 32 தொழிலாளர்கள் பலி




மாலியில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில், தங்கச் சுரங்க தொழிலாளர்கள் 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

மாலியில் இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்நாட்டில் ஐ.எஸ்.ஐ.எஸ். அல்கொய்தா ஆதரவு கிளர்ச்சியாளர் குழுக்கள் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

இந்த பயங்கரவாத குழுக்கள் பொதுமக்களைக் குறிவைத்துத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் வடக்கு பகுதியில் கோவா நகரில் தங்க சுரங்கம் உள்ளது. இந்த சுரங்கத்துக்கு ஞாயிற்றுக்கிழமை(9) தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு வாகனங்கள் சென்று கொண்டிருந்தன. அவர்களுக்குப் பாதுகாப்பாக இராணுவ வீரர்களும் சென்றுள்ளனர்.

அப்போது, அந்த வாகனங்களைக் குறித்து கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் தங்கச் சுரங்க தொழிலாளர்கள் 32 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலைத் தொடர்ந்து இராணுவ வீரர்களும் பதிலடி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் கிளர்ச்சியாளர்களும் உயிரிழந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மெக்சிகோ

### லொறி–பஸ் விபத்து:

# 41 பேர் உடல் கருகி பலி



மெக்சிகோவில் லொறி மீது பேருந்து மோதி தீப்பற்றி எரிந்த சம்பவத்தில் 41 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.

மெக்சிகோவின், குயிண்டினா ரோ மாகாணம் கான்கன் நகரில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (09) டபாஸ்கோ நகருக்கு சென்று கொண்டிருந்த பேருந்தில் 48 பேர் பயணித்துள்ளனர்.

குறித்த பேருந்து எஸ்கார்சிகா என்ற பகுதியில் சென்றபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் எதிரே வந்த லொறி ஒன்றின் மீது வேகமாக மோதியுள்ளது.

இந்த விபத்தில் பேருந்து தீப்பற்றி எரிந்துள்ளது. இதனால், பேருந்தில் இருந்த பயணிகள் தீயில் சிக்கிக்கொண்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த தீயணைப்பு, மீட்புப்படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பற்றி எரிந்த பேருந்தின் தீயை அணித்துள்ளனர். ஆனாலும், இந்த சம்பவத்தில் பேருந்தில் பயணித்த 41 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். மேலும் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆந்திரா

### திருப்பதி லட்டு விவகாரம்:

# நால்வர் கைது



திருப்பதி லட்டு விவகாரம் தொடர்பாக, திண்டுக்கல் தனியார் பால் பொருட்கள் தயாரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்தவர் உட்பட 4 பேரை, சிறப்புப் புலனாய்வுக் குழு கைது செய்துள்ளது.

ஆந்திராவில் கடந்த ஜெகன்மோகன் ரெட்டி ஆட்சியில் நியமிக்கப்பட்ட திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு கொள்முதல் செய்த நெய்யில் தயாரிக்கப்பட்ட லட்டு பிரசாதம் தரமற்றதாக உள்ளது என புகார் எழுந்தது.

இந்நிலையில், ஆந்திராவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும், கோவிலின் புதிய நிர்வாக அதிகாரியாக சியாமள ராவ் நியமிக்கப்பட்டார். அவர் மேற்கொண்ட ஆய்வில் லட்டு பிரசாதம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் நெய்யின் தரம் குறைவாக இருப்பதை அறிந்தார்.

அந்த நெய்யைக் குஜராத் மாநிலம், ஆனந்த் பகுதியில் உள்ள பரிசோதனை மையத்துக்கு அனுப்பி வைத்தார். கடந்த ஜூலை 17ஆம் திகதி வந்த பரிசோதனை அறிக்கையில், "நெய்யில் மீன் எண்ணெய், மாடு மற்றும் பன்றிக் கொழுப்பு கலந்துள்ளது. இது தரமற்ற நெய்" என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து முந்தைய ஆட்சியின் கொள்முதல் டெண்டரை சந்திரபாபு நாயுடு அரசு இரத்து செய்தது. கடந்த ஒகஸ்ட் முதல் அனைத்து பிரசாதங்களுக்கும் கர்நாடக அரசின் 'நந்தினி' நெய் பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், ஜெகன் ஆட்சியில் திருப்பதி பிரசாதங்கள் தயாரிக்க விலங்குகளின் கொழுப்பு கலந்த நெய் பயன்படுத்தப்பட்டதாக முதல்வர் சந்திரபாபு நாயுடு பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். இது தேசிய அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

திருப்பதி லட்டு சர்ச்சை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், திருப்பதி லட்டு கலப்பட விவகாரத்தில் ஆந்திரா அரசு அமைத்த விசாரணைக் குழுவுக்குப் பதிலாக புதிய சுதந்திரமான சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்.ஐ.டி.) அமைக்க உத்தரவிட்டது. அதன்படி சி.பி.ஐ. 5 அதிகாரிகள் கொண்ட சிறப்புக் குழுவை அமைத்தது. அதில் சி.பி.ஐ. தரப்பில் 2 அதிகாரிகள் ஆந்திர காவல்துறை அதிகாரிகள் 2 பேர் உணவுத் தரக் கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவர் இடம் பெற்றிருந்தனர்

இந்நிலையில், திருப்பதி லட்டு விவகாரம் தொடர்பாகத் திண்டுக்கல் தனியார் பால் பொருட்கள் தயாரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்தவர் உட்பட 4 பேரை சி.பி.ஐ. கைது செய்துள்ளது.

இவர்கள் 4 பேரிடமும் 3 நாட்களாகவே சி.பி.ஐ. விசாரணை நடத்திவந்ததாகவும், விசாரணைக்கு இவர்கள் ஒத்துழைப்பு வழங்காத நிலையில் இவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், தெலுங்கு தேச கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மத்தியப் பிரதேசம்

### திருமண நிகழ்வில்

# நடனமாடிய பெண் மரணம்



மத்தியப் பிரதேசம், இந்தூரில், திருமணத்தில், பாடல் ஒன்றுக்கு நடனமாடிய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மத்தியப் பிரதேசம், இந்தூரை சேர்ந்த பெண் ஒருவர், தனது சகோதரியின் திருமணத்தையொட்டி மேடையில் பாடல் ஒன்றுக்கு நடனமாடினார். அப்போது திடீரென மயங்கி கீழே விழுந்தார். இதைக்கண்ட உறவினர்கள் அவரை உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அவரை சோதனை செய்த வைத்தியர்கள் அவர் ஏற்கெனவே மாரடைப்பால் உயிரிழந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் திருமணத்துக்கு வந்தவர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

இது குறித்துத் தகவலறிந்த பொலிஸார், வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



### இங்கிலாந்து கால்பந்தாட்ட சவால் கிண்ணத் தொடர்:

# வெளியேற்றப்பட்ட லிவர்பூல், டொட்டென்ஹாம்

இங்கிலாந்து கால்பந்தாட்ட சவால் கிண்ணத் தொடரிலிருந்து லிவர்பூல், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் ஆகியன வெளியேற்றப்பட்டுள்ளன.

விலகல் முறையிலான இத்தொடரில், பிளைமூத் அர்கைலின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்ற அவ்வணியுடனான நான்காவது சுற்றுப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் தோற்றே தொடரிலிருந்து லிவர்பூல் வெளியேற்றப்பட்டுள்ளது.

அர்கைல் சார்பாகப் பெறப்பட்ட கோலை றயான் ஹார்டி பெற்றிருந்தார்.

இதேவேளை அஸ்தன் வில்லாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரும் தொடரிலிருந்து வெளியேறியது. வில்லா சார்பாக ஜேக்கப் றம்சி, மோர்கன் றோஜர்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை மதியிஸ் டெல் பெற்றிருந்தார்.

### ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# செவிய்யாவை வீழ்த்திய பார்சிலோனா



ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், செவிய்யாவின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வென்றது.

பார்சிலோனா சார்பாக றொபேர்ட் லெவன்டோஸ்கி, பெர்மின் லொபேஸ், றபீனியா, எரிக் கர்சியா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். செவிய்யா சார்பாகப் பெறப்பட்ட கோலை ருபென் வர்காஸ் பெற்றிருந்தார்.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 50 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் காணப்படுகின்றது. 49 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும், 48 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் பார்சிலோனாவும், 44 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிக் பில்பாவோவும் காணப்படுகின்றன.

### இங்கிலாந்துக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய இந்தியா



இங்கிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இந்தியா ஏற்கெனவே வென்ற நிலையில், கட்டாக்கில் ஞாயிற்றுக்கிழமை(09) நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்ற நிலையிலேயே இன்னுமொரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றுவதை இந்தியா உறுதி செய்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, ஜோ றூட்டின் 69 (72), பென் டக்கெட்டின் 65 (56), லியம் லிவிங்ஸ்டோனின் 41 (32), அணித்தலைவர் ஜொஸ் பட்லரின் 34 (35), ஹரி ப்றூக்கின் 31 (52) ஓட்டங்களோடு 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 304 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், இரவீந்திர ஜடேஜா 3 மற்றும் வருண் சக்கரவர்த்தி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 305 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, அணித்தலைவர் றோஹித் ஷர்மாவின் 119 (90), ஷுப்மன் கில்லின் 60 (52), ஷ்ரேயாஸ் ஐயரின் 44 (47), அக்ஸர் பட்டேலின் ஆட்டமிழக்காத 41 (43) ஓட்டங்களோடு 44.3 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் ஜேமி ஒவெர்ட்டன் 2, லிவிங்ஸ்டோன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக ஷர்மா தெரிவானார்.

### சுப்பர் போல்:

# சம்பியனானது பிலடெல்பியா ஈகிள்ஸ்



ஐக்கிய அமெரிக்க தேசிய கால்பந்தாட்ட லீக்கின் சம்பியன்ஷிப் போட்டியான சுப்பர் போலில் பிலடெல்பியா ஈகிள்ஸ் சம்பியனானது.

நியூ ஓர்லியன்ஸில் திங்கட்கிழமை(10) காலை நடைபெற்ற அமெரிக்க கால்பந்தாட்ட மாநாட்டு சம்பியனான கன்ஸாஸ் சிற்றி சீஃப்ஸை 40-22 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றே தேசிய கால்பந்தாட்ட மாநாட்டு சம்பியனான ஈகிள்ஸ் சுப்பர் போலில் சம்பியனானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 11, பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.